தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
**Tamilar Remembrance Foundation - Swiss**
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.com trfswiss@gmail.com

**15 வயதுப்பிரிவு**
(01.01.2001 – 31.12.2002 வரையில் பிறந்தோர்)

## புதிய பரணி பாடுவோம்

தமிழீழ விடுதலை நோக்கிய பயணத்தில் நாம் எமது முழு ஆற்றலையும் திரட்டிப் பலம்பெற வேண்டிய காலமிது. உணர்வு குன்றாமல் உறுதி தளராமல் தனித்தமிழீழம் ஒன்றே எமது குறிக்கோள் என உரத்து முழங்க வேண்டிய காலம். வரலாறுகள் விவாதிக்கப்படுகின்ற காலத்தில் வரிப்புலிகளின் வீரத்தை நரிகள் மதிப்பிட்டுச் சொல்வது சரியாகி விடுமா? ஆதலால், எமது வரலாற்றை நாமே அழுத்தி எழுதுவோம்.

நாம் ஊமைகளாக உள்ளவரை இந்த உலகம் செவிடாகத்தான் இருக்கும். புறக்கணிக்கிறார்கள் என்று தெரிந்தும் சகித்துக்கொண்டு உடன் இருப்பதற்கு அடிமைத்தனம் எனப்பொருள். ஒரு இனத்தின் மொழி, வரலாறு, பண்பாடு போன்றவற்றை சூட்சுமமான முறையில் மழுங்கச் செய்வதும் திட்டமிட்டு சீர்குலைப்பதும் இன அழிப்பின் வடிவமே.

சிங்கள அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எம் இனத்தைப் பாதுகாத்து, எமது சுதந்திர தேசத்தின் விடுதலைக்காக உலகளவில் பரந்துபட்ட அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு எம்முடையது. இதையுணர்ந்து, நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமக்கான நீதிக்காகவும் எம்மினத்தின் விடிவுக்காகவும் பன்னாடுகளின் அரசியல் களத்தில் நின்று போராட வேண்டும்.

பிறரின் தேவைக்காக தம்மை மாற்றிக்கொள்பவைகளின் வாழ்வு குறுகியது. தமது தேவைகளுக்கு ஏற்ப சூழலை மாற்றிக்கொள்பவைகளின் வாழ்வு நெடியது என்பது நாமறிந்த பாடம். மாறிவரும் உலக அரசியல் ஒழுங்கை எமக்கு சாதகமாக மாற்றிக்கொள்ள நாம் எத்தனிப்போம். எம் தியாகமும் உறுதியும்தான் எமது போராட்டத்தை வளர்த்தது! எம்பக்க நியாயத்தை வையகத்திற்குப் பறைசாற்றியது! அதே உறுதியுடன் தொடர்ந்து செல்வோம்.

எமது போராட்டம் நியாயமானதாகவும் சத்தியத்தின் வழி நிற்பதனாலும் மட்டும் இந்த வையகம் எமக்கு சாதகமாக நிற்கப்போவதில்லை. நாம் பலம் பொருந்தியவர்களாகவும் தகுதியுள்ளவர்களாகவும் எம்மை மாற்றிக் கொள்வோமேயானால் அது எமக்கான நீதியைப் பேசும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் இளம் சமுதாயம் ஆரோக்கியமான சிந்தனைகளுடனும் கடந்த காலத்தைப் பற்றிய சரியான புரிதலுடனும் வையகத்தின் நிகழ்கால, எதிர்கால போக்குகளைத் தன்னகத்தே உள்வாங்கியும் செயற்பட வேண்டும். அத்தகைய இளம் சமுதாயம், பல்துறை வல்லுனர்களாக வளர்ந்து வருவதோடு, தமது எதிர்கால சந்ததிக்கும் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ வேண்டியது அவசியமாகும்.

விடுதலைப் பயணத்தை முழு மூச்சுடனும் வீச்சுடனும் முன்னெடுக்க மாவீரர் தியாகங்கள் எம்மை வழிநடத்தும். ஓரணியில் திரண்டு இலட்சியத்தை வென்று தரணி மீதிலே நாம் புதிய பரணி பாடும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை.

புலியின் கொடி பிடித்துப் புயலாய்ச் சுழன்றடித்து அடிமை விலங்கொடித்துக் கொடிய பகை முடித்துத் தமிழ்க்குடியைச் சிறக்கச் செய்தவர்கள்! புலிக்கொடியை வான் உயரப் பறக்கச் செய்தவர்கள் வழிவந்த பரம்பரையினர் நாம் என்ற சரித்திரத்தை எங்கள் சந்ததிக்குச் சொல்வோம்.

நன்றி
வணக்கம்.